இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 29-06-2024

# இது அறிவிக்கப்படாத எமர்ஜென்சி தானே?

அவசர நிலைக்கு எதிராகவும் அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஆதரவாகவும் பிரதமர் நரேந்திர மோடி பேசி இருப்பதைப் பார்க்கும்போது புல்லரிக்கிறது.

1975 ஆம் ஆண்டு இந்தியாவில் அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டதை நினைவு கூர்கிறார் மோடி. அதாவது காங்கிரசு கட்சிக்கு எதிராகப் பேசுவதற்காக இந்த விவகாரத்தைக் கையில் எடுத்தார். இந்திய அரசியலமைப்பு புத்தகத்தை ராகுல் எடுத்துக் காட்டுவது அவருக்கு எரிச்சலைத் தருகிறது. அதனால் பழைய வரலாற்றைச் சொல்லி காங்கிரசைக் கேள்வி கேட்கிறாராம் மோடி.

**“எமர்ஜென்சியை அமல்படுத்தியவர்களுக்கு, நமது அரசியலமைப்புச் சட்டத்தை நேசிப்பதற்காகச் சொல்வதற்கு எந்த உரிமையும் இல்லை. எமர்ஜென்சியைக் கொண்டு வந்த மனநிலை, அதே கட்சியினரிடம் இப்போதும் உயிர்ப்புடன் உள்ளது. தேசத்தை சிறையாக மாற்றியவர்கள் அவர்கள்” என்று சொல்லி தனது ஆத்திரத்தை தீர்த்துக் கொண்டுள்ளார் பிரதமர்.**

எமர்ஜென்சியைக் கொண்டு வந்ததற்கு வருத்தம் தெரிவித்து, 1979 செப்டம்பர் 30 சென்னையில் தி.மு.க. சார்பில் நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழா, பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் ஆகியவை இணைத்து நடைபெற விழாவில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களே பேசிவிட்டார்கள். இது வரலாறு.

ஆனால், **எமர்ஜென்சியைப் பற்றி பேசுவதற்கான தகுதி இன்றைய பிரதமருக்கு இருக்கிறதா? பத்தாண்டுகாலமாக அறிவிக்கப்படாத எமர்ஜென்சியை அமலில் வைத்திருப்பவர் அல்லவா மோடி?**

**எதிர்க்கட்சி ஆட்சியில் இருக்கும் மாநில அரசுகளைக் கலைக்கும் 356 ஆவது பிரிவை விட மோசமானது கட்சிகளை உடைப்பது, ஆட்களை இழுப்பது, ஆட்சிகளைக் கவிழ்ப்பது. இதைத் தானே பத்தாண்டு காலமாக மோடி செய்து கொண்டு இருக்கிறார். மக்களால் நேரடியாக தேர்வு செய்யப்பட்டு அரசாங்கங்களை அமைப்பதை விட, இருக்கும் ஆட்சிகளை கவிழ்த்து தங்களது கொத்தடிமைகளாக மாற்றுவது தானே மோடி பாணி சட்டம். அதிகப்படியான மாநில அரசுகளைக் கவிழ்த்து, அங்கெல்லாம் பா.ஜ.க.வின் தொங்கு சதை ஆட்சிகளை உருவாக்கியது அவரது மிசா பாணியல்லவா?**

நாடாளுமன்றத்தில் விவாதமே இல்லாமல் சட்டங்களை நிறைவேற்றிய காலமல்லவா மோடிகாலம். எத்தனையோ சட்டங்களை விவாதம் இல்லாமல் நிறைவேற்றி விட்டார்கள். அதை விட முக்கியமாக 100க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை சபையை விட்டு டிஸ்மிஸ் செய்துவிட்டு நாடாளுமன்றத்தில் சட்டங்கள் நிறைவேற்றியதை விட மக்களாட்சியின் மாண்பு குலைக்கப்பட்டதற்கு எடுத்துக் காட்டு தேவையா?

இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர்கள், நீதிபதிகள், பத்திரிகையாளர்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள் என்று தேர்ந்தெடுத்து அவர்களது தொலைபேசி எண்கள், அந்நிய நாட்டு நிறுவனத்தின் துணையோடு ஒட்டுக் கேட்கப்பட்ட தகவல் வெளியானது. ‘பெகாசஸ்’ ஒட்டுக் கேட்பு விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றம், மாநிலங்களவை ஆகிய இரண்டிலும் விவாதம் நடத்த வேண்டும் என்பது தான் எதிர்க்கட்சிகளின் ஒரே ஒரு கோரிக்கை. அதை நிறைவேற்றாமல் இழுத்தடித்தார்கள். மணிப்பூர் குறித்தோ, அதானி விவகாரம் பற்றியோ, ரஃபேல் ஊழலைப் பற்றியோ விவாதம் நடத்தப்பட்டதா? பல்லாயிரம் கோடி போட்டு புது பில்டிங் கட்டியதால் என்ன பயன்?

**மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக இரண்டாண்டு காலம் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் வெயில் - மழை பாராமல் தலைநகர் சாலைகளை முடக்கிப் போட்டுப் படுத்துக் கிடந்த பரிதாபக் காட்சிகள் பா.ஜ.க.வின் எமர்ஜென்சி கொடுமைகளாக எல்லாக் காலத்திலும் சொல்லும். சிறுபான்மை மக்களை மொத்தமாக முடக்க குடியுரிமைச் சட்டம் என்ற குற்றுயிர் ஆக்கும் சட்டமும் எமர்ஜென்சியின் சாட்சியம் அல்லவா?**

அரசியல் சட்ட காலம் முதல் இருந்த காஷ்மீரின் சிறப்புரிமையை - காஷ்மீர் அரசியல் கட்சித் தலைவர்கள் அத்தனை பேரையும் வீட்டுச் சிறையில் வைத்து நிறைவேற்றியவர் தான், ‘தேசத்தை சிறையாக மாற்றினார்கள்’ என்று இப்போது பேசுகிறார். 2019 ஆம் ஆண்டு முதல் இன்று வரை காஷ்மீரில் சட்டசபைத் தேர்தல் உண்டா? நடத்தும் தைரியம் தான் உண்டா?

டெல்லி மாநில முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் சிறையில் இருக்கிறார். ஜார்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் சிறையில் இருக்கிறார். எதிர்க்கட்சிகளை வேட்டையாடும் எமர்ஜென்சி அமைப்புகளாக சி.பி.ஐ., வருமானவரித் துறை, அமலாக்கத்துறை மாற்றப்பட்டு விட்டது. பா.ஜ.க.வுக்கு எதிரான கட்சித் தலைவர்கள் இவர்கள் மூலமாக மிரட்டப்படுகிறார்கள். பா.ஜ.க.வுக்கு ஆதரவாக ரசாயன மாற்றம் செய்ய இந்த அமைப்புகள் பயன்படுத்தப்படுகிறது. பல்லாயிரம், பல லட்சம் கோடி ஊழல் வாதிகள் கூட பா.ஜ.க.வுக்குள் போனால் சுத்தமாகி வரும் வாஷிங் மிஷின் ‘மோடி பாணி எமர்ஜென்சி’யின் சாட்சியங்கள் அல்லவா?

**‘400 கொடுங்கள் - நினைத்ததைச் செய்ய வேண்டும்’ என்று கொக்கரித்தது பா.ஜ.க. 240க்கு இறக்கினார்கள் இந்திய நாட்டு மக்கள். அதனால் தான் இந்திய அரசியலமைப்பு சட்டப் புத்தகத்தை தலைகுனிந்து வணங்கினார் மோடி. இல்லாவிட்டால் நிலைமையே வேறு. இந்த பத்து நாட்களில் என்னென்னவோ செய்திருப்பார்கள். நீட்டி முழங்கி இருப்பார். ‘நிரந்தர எமர்ஜென்சியை’ அவரால் செய்ய முடியாமல் போன ஆத்திரத்தை தான் பழைய கதையைப் பேசி தன்னைத் தானே தேற்றிக் கொள்கிறார் பிரதமர்.**

●●

### அறிவிக்கப்படாத அவசர நிலையை 10 ஆண்டுகளாக

# பா.ஜ.க. பிரகடனப்படுத்தி உள்ளது!

### மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா குற்றச்சாட்டு!

டெல்லி, ஜூன் 29 -

கடந்த 10 ஆண்டுகளாக நாட்டில் அறிவிக்கப்படாத அவசர நிலையை பாரதிய ஜனதா கட்சி பிரகடனப்படுத்தி உள்ளதாக திமுக மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா டெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்துள்ளார்.

அப்போது பேசிய திருச்சி சிவா, அவசர நிலை குறித்து குடியரசுத் தலைவர் என்று பேசியுள்ளார். அவசர நிலையில் அதிகம் பாதிக்கப்பட்ட கட்சி திராவிட முன்னேற்ற கழகம் எனவும் அவசர நிலை நாட்டில் பிரகடனப் படுத்தப்பட்டது என்பது மறைக்கப்பட வேண்டியதில்லை எனவும் தெரிவித்தார்.

50 ஆண்டுகளுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட அவசரநிலை அவை என்றால், கடந்த 10 ஆண்டுகளாக நாட்டில் அறிவிக்கப்படாத அவசர நிலை செயல்பாட்டில் உள்ளதாகவும், மத்திய அமைப்புகள் மூலமாக எதிர்கட்சியினர், முக்கிய அரசியல்வாதிகள் கைது செய்யப்படுவதும் சிறையில் அடைக்கப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் என அறிவிக்கப்படாத அவசர நிலையை பாஜக கடைபிடித்து வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இனிமேல் அவசர நிலை வரவே கூடாது என பாரதிய ஜனதா கட்சி எண்ணுகிறது என்றால் அவசர நிலையின் போது செய்யப்பட்ட மாற்றங்களை மீண்டும் திருத்தம் செய்ய வேண்டும் எனவும், குறிப்பாக மாநில பட்டியலில் இருந்த கல்வியை அவசர நிலையின் போது பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டதாகவும், ஏன் அதனை மீண்டும் மாநில பட்டியலுக்கு பாரதிய ஜனதா கட்சி மாற்ற முன்வரவில்லை? எனவும் கேள்வி எழுப்பினார்.

மேலும் இன்று குடியரசுத் தலைவர் உரை ஆளும் அரசாங்கம் எழுதிக் கொடுத்த உரை எனவும் அதிலும் குறிப்பாக பெரும்பான்மை பெற்ற அரசாங்க ஒன்றிய அரசு உள்ளது என குடியரசுத் தலைவர் குறிப்பிட்டது அதிகம் சிரிப்பை ஏற்படுத்துவதாக கிண்டல் அடித்தார். அறுதி பெரும்பான்மை கூட இல்லாத கட்சியாக பா.ஜ.க. வெற்றி பெற்றுவிட்டு கூட்டணிக் கட்சிகளின் தயவோடு ஆட்சி அமைத்துள்ள அவர்கள் பெரும்பான்மை பெற்ற கட்சி என நாடாளுமன்றத்தில் சொல்கிறார்கள் எனவும் திருச்சி சிவா குறிப்பிட்டார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.06.2024) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, 2024–2025 ஆம் ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.06.2024) தலைமைச் செயலகத்தில், காவேரி டெல்டா பாசன விவசாய சங்கங்கள் கூட்டமைப்பு தலைவர் கே.வி. இளங்கீரன், தஞ்சாவூர் – அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கத்தின் செயலாளர் கோவிந்தராஜ், மயிலாடுதுறை மாவட்ட காவேரி டெல்டா பாசனதாரர்கள் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் கோபி கணேசன், திருச்சி – தமிழக ஏரி மற்றும் ஆற்றுப் பாசன விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் விஸ்வநாதன், இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியின் (தமிழக விவசாயிகள் சங்கம்) மாநிலத் தலைவர் வேட்டவலம் கே. மணிகண்டன், விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் மாநிலச் செயலாளர் அக்ரி கா. பசுமை வளவன், தஞ்சாவூர் – தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் கண்ணன், காஞ்சிபுரம் மாவட்டம் – குன்றத்தூர், உழவர் உற்பத்தியாளர் குழுத் தலைவர் பார்த்திபன், வாலாஜாபாத் வட்டாரம் உழவர் உற்பத்தியாளர் குழுத் தலைவர் ஆறுமுகம், காஞ்சிபுரம் மாவட்டம் – உழவர் நண்பர் சந்திரமோகன், இந்திய விவசாயிகள் சங்கத்தின் தனபதி, சேலம் – ஐக்கிய விவசாயிகள் சங்கத் தலைவர் சங்கரய்யா, பொருளாளர் சரவணன், இந்திய விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு மாநிலச் செயலாளர் வாரணாசி இராஜேந்திரன், காவேரி டெல்டா விவசாயிகள் சங்கத் தலைவர் பாலு, காஞ்சிபுரம் மாவட்ட விவசாய சங்க அமைப்பாளர் ஞானப்பிரகாசம், செங்கல்பட்டு மாவட்டம் – பாலாறு படுகை விவசாயிகள் சங்கத் தலைவர் தனசேகரன் மற்றும் ஜீவகுமார், இராமுலு, வெங்கடாத்திரி உள்ளிட்ட விவசாய சங்கத்தினர் சந்தித்து, 2024–25 ஆம் ஆண்டு நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையுடன் காரீப் கொள்முதல் பருவத்திற்கு சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.105/ம், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.130/ம் கூடுதல் ஊக்கத் தொகையாக தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா ஆகியோர் உள்ளனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மேல்முறையீடு செய்த

# 1.48 லட்சம் விண்ணப்பங்கள் ஏற்பு!

சென்னை, ஜூன் 28-

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மேல்முறையீடு செய்தவர்களில் ஒரு லட்சத்து 48 ஆயிரம் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டுள்ளதாக சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை தெரிவித்துள்ளது.



சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை சார்பில், சட்டப்பேரவையில், கொள்கை விளக்கக் குறிப்பு தாக்கல் செய்யப்பட்டது. அதில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கென 2023-24ம் நிதியாண்டில் 8 ஆயிரத்து 124 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், 2024-25ம் நிதியாண்டிற்கென 13 ஆயிரத்து 722 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் மூலம் கடந்த மார்ச் 31ம் தேதி வரை முகாம் வாழ் இலங்கை தமிழர் குடும்பங்கள் உட்பட ஒரு கோடியே 15 லட்சத்து 27 ஆயிரத்து 172 மகளிர் பயனடைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலைஞர் உரிமைத் தொகை கோரி மேல்முறையீடு செய்தவர்களில் ஒரு இலட்சத்து 48 ஆயிரம் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. நிராகரிக்கப்பட்ட மேல்முறையீடு விண்ணப்பதாரர்கள் விரும்பினால், நிராகரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாள்களுக்குள் இ-சேவை மையம் வழியாக மேல்முறையீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

